# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.55/2023

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுன் மாதம் 17 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனுசாமி | மதம் | : இந்து |
| த/பெ | : ஏழுமலை | ஜாதி | : -- |
| வயது | : 80 | கிராமம் | : அருங்குளம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**17.06.2025**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி அழைத்து வந்தேன். பிரமாண வாக்குமூலத்தில் A அட்டவணை சொத்து வாதிக்கு சொந்தம் என்று சொல்லியுள்ள நிலையில் A அட்டவணை சொத்தின் புல எண், பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் சொத்தை எப்போது கிரையம் வாங்கினார்கள் என்று தெரியுமா என்றால் வருடம் தெரியாது. துரைசாமி சஞ்சீவி மந்தடிக்கு விற்றார். சஞ்சீவி மந்தடி முனிரத்தினத்திற்கு விற்றார்.

2. துரைசாமி சஞ்சீவி மந்தடிக்கு விற்று சஞ்சீவி மந்தடி முனிரத்தினத்திற்கு விற்றதாக சொல்வதில் அது என்ன புல எண் என்று தெரியுமா என்றால் புல எண் தெரியாது. 6 அல்லது 7 செண்ட்டை விற்றார். 1 1/2 செண்ட் முனிரத்தினத்திற்கு பூர்வீக சொத்தாகும். எனக்கு என்ன வயது என்றால் 80 ஆகும். நான் துரைசாமி மந்தடியையோ, சஞ்சீவி மந்தடியையோ பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். துரைசாமி மந்தடியும், சஞ்சீவி மந்தடியும் உறவினர்களா என்றால் ஆமாம். துரைசாமி மந்தடி பெண்ணை சஞ்சீவி மந்தடிக்கு கொடுத்தார்.

3. சஞ்சீவி மந்தடி கிரையம் வாங்கி சுமார் எத்தனை வருடம் அனுபவித்தார்

என்றால் சிறிது காலம்தான் வைத்திருந்தார். சுமார் 7, 8 வருடங்கள் வைத்திருந்திருப்பார். சொத்து துரைசாமி மந்தடிக்கு பூர்வீகமான சொத்தா அல்லது கிரையம் வாங்கிய சொத்தா என்றால் பூர்வீகமான சொத்துதான். துரைசாமி மந்தடியின் அப்பா பெயர் தெரியுமா என்றால் வயதானதால் தெரியவில்லை. சஞ்சீவி மந்தடியின் அப்பா பெயர் தெரியுமா என்றால் சினிய மந்தடி ஆகும். நான் பிரமாண வாக்குமூலத்தில் A அட்டவணை சொத்திற்கு மட்டும்தான் சொல்லியுள்ளேன் என்றாலும் B அட்டவணை சொத்தை சொல்லவில்லை என்றாலும் சரிதான்.

4. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 3 செண்ட், 6 செண்ட் என குறிப்பாக எங்கும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு எதுவும் தெரியவில்லை. ஒரு 5 செண்ட் மற்றும் ஒரு 3 செண்ட் மொத்தம் 8 செண்ட்க்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகள், பிரதிவாதிகளை எத்தனை வருடங்களாக எனக்கு தெரியும் என்றால் அவர்கள் பிறந்ததில் இருந்து எனக்கு தெரியும். முனிரத்தினம் இடம் நான் விற்ற சொத்திற்கு அருகில் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான் கிரையம் கொடுத்த சொத்தின் புல எண் விஸ்தீரணம் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. 23 செண்ட்டை விற்றேன்.

5. முனிரத்தினத்திற்கு வழக்கு சொத்து மட்டும் உள்ளதா அல்லது வேறு சொத்துக்களும் உள்ளதா என்றால் வேறு சொத்துக்களும் உள்ளது. முனிரத்தினத்தின் எந்த சொத்து என் சொத்திற்கு அருகில் உள்ளது என புல எண் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் வயதானதால் தெரியவில்லை. சஞ்சீவி மந்தடி, அவரது மகனான அயிலு மந்தடியிடம் நான் சொத்து எதுவும் வாங்கியுள்ளேனா என்றால் அயிலு மந்தடியிடம் சொத்து வாங்கி 50 வருடங்கள் இருக்கும். அயிலு மந்தடியின் பூர்வீகம் இந்த ஊர்தானா என்றால் மாமண்டுர் ஆகும். மாமண்டுரை சேர்ந்த அயிலு மந்தடிக்கு அருங்குளத்தில் சொத்து எப்படி வந்தது என்றால் அவர் பூர்வீகமாக பணக்காரர் ஆவார்.

6. அயிலு மந்தடி எங்கள் ஊரில் பணக்காரராக இருந்தார் என்றால் அவர் மகாராஜாவாக வாழ்ந்தார். கஜேந்திரன் சொத்து என் சொத்திற்கு சிறிது தொலைவில் இருப்பதாக நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் என் சொத்திற்கு பக்கத்தில் உள்ளது. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கஜேந்திரன் சொத்து என் சொத்திற்கு சிறிது தொலைவில் இருப்பதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கஜேந்திரனுக்கும் முனிரத்தினத்திற்கும் எப்போது தகராறு நடந்தது

என்றால் தற்போது ஒரு வருடமாகதான் நடக்கிறது. ஒரு வருடத்திற்கு முன்பு அவர்களுக்குள் தகராறு நடக்கவில்லை. நான் அவர்களிடம் ஏதேனும் சமாதான பேச்சு வார்த்தை நடத்தினேனா என்றால் இல்லை. நான் சில வருடங்களாக வாதியின் சொத்தில் பயிர் செய்யவிடாமல் பிரதிவாதிகள் தகராறு செய்வதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை.

7. வாதிக்கும் பிரதிவாதிக்கும் தகராறு நடந்ததை கண்கூடாக பார்த்தேனா என்றால் இல்லை. வாதிக்கும் பிரதிவாதிக்கும் தகராறு நடந்ததை கண்கூடாக பார்த்ததாக நான் பொய்யாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. ஒரு வருடமாகதான் பிரச்சனை நடக்கிறது. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். வாதி தனக்கு சாதகமாக சாட்சி சொல்ல வேண்டும் என்று என்னை அழைத்து வந்தார் என்றால் இல்லை. எனக்கு வழக்கு சொத்தின் விவரங்கள், விஸ்தீரணம் புல எண் எதுவும் தெரியாமல் வாதிக்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் இல்லை.

8. வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். எனக்கு வழக்கு விவரங்களே தெரியாது என்றாலும் வாதி அழைத்து நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் இல்லை.

(மறு விசாரணை இல்லை)